# பத்திரிக்கை செய்தி

## பதவி உயர்வு சம்பள நிலுவைத்தொகை பெற்று வழங்க கையூட்டு கேட்டுப்பெற்ற வழக்கில் முன்னால் உதவியாளர், கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி என்பவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பு.

தஞ்சாவூர் மாவட்டம், பூண்டியில் உள்ள அ.வீரைய்யா வாண்டையார் நினைவு திரு.புஷ்பம் கல்லூரி(தன்னாட்சி)யில் இயற்பியல் துறையில் உதவிப்பேராசிரியராக பணிபுரிந்து வந்த டாக்டர்.பா.சக்திவேல் என்பவருக்கு அவரது பதவி உயர்வுக்குரிய 19 மாதங்களுக்கான சம்பள நிலுவைத்தொகையை பெற்று வழங்க, கையூட்டாக ரூ.2,000/-ம் கேட்டது தொடர்பாக கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலக உதவியாளர் திரு.D.வேணுகோபால் என்பவர் மீது திருச்சி ஊ.த.க பிரிவு கு.எண்.3/2012, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம்-1988ன்படி கடந்த 18.01.2012ம் தேதி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 19.01.2012ந்தேதி மேற்கொண்ட பொறிவைப்பு நடவடிக்கையில், புகார்தாரர் டாக்டர்.பா.சக்திவேல் என்பவரிடம் கையூட்டு பணம் ரூ.2,000/-த்தை கேட்டு பெற்ற போது எதிரி திரு.வேணுகோபால் திருச்சி லஞ்ச ஒழிப்பு போலிசாரால் கைது செய்யப்பட்டார். மேற்படி வழக்கானது திருச்சி, ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. விசாரணை முடிவுற்று இன்று 17.03.2023 திருச்சி ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு.கார்த்திகேயன் அவர்கள், திரு.D.வேணுகோபால், முன்னர் உதவியாளர், கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்பவருக்கு லஞ்சப்பணம் கேட்டுப்பெற்ற குற்றத்திற்காக **ஓராண்டு கடுங்காவல் தண்டனையும்,ரூ.10,000/- அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனையும், அரசு பதவியை தவறாக பயன்படுத்தி கையூட்டு கேட்டுப்பெற்ற குற்றத்திற்காக 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனையும் விதித்ததோடு, மேற்கண்ட தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிட்டார்.**

**<u>PRESS NEWS</u>**

**<u>Former Assistant, o/o Regional Joint Director of collegiate Education Trichy District convicted in Bribe Case</u>.**

The accused Tr.D.Venugopal, Formerly Assistant, Office of the Regional Joint Director of Collegiate Education, Trichy district actuated by corrupt motive, demanded bribe of Rs.2,000/- on 18.01.212 in the O/o the Regional Joint Director of Collegiate Education, Trichy from the complainant one Dr.Sakthivel, Assistant Professor in A.Veriya Vandaiyar Memorial Sri Pushpam College, Poondi, Thanjavur district, for arranging the payment of salary arrears to the complainant Dr.Sakthivel. The accused Venugopal, reiterated his earlier demand and obtained Rs.2,000/- on 19.01.2012 in the O/o the Regional Joint Director of Collegiate Education, Trichy from complainant Sakthivel infront of the official witness. The demand and reiteration of demand by the accused Tr.D.Venugopal could be ascertained and sufficiently established through statement of witnesses and they were produced before the Court. The subsequent acceptance of bribe also stands established through witnesses and were also produced before the Court. The accused abused his official position and obtained the bribe money Rs.2,000/. The accused Tr.D.Venugopal convicted today 17.03.2023 for obtainment of Bribe Amount of Rs.2,000/- by the Special Judge Tr.Karthikeyan, Special Court, Trichy. The sentence to 1 Year Rigorous Imprisonment and fine Rs.10,000/-, i/d 6 months Simple Imprisonment for u/s 7 of PC act and accused Sentence undergo 3 years Rigorous Imprisonment and fine Rs.10,000/--, i/d 6 months Simple Imprisonment for u/s 13(2) r/w 13(1) (d) of PC Act. The Special Public Prosecutor Tr.Sureshkumar and Inspector Tr.G.Sakthivel of Vigilance and Anti-Corruption have successfully presented the case before the Court, the case was ended in conviction.